**கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டம் - 2017**

கிழக்கு மாகாண நீர்வழங்கல் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரிற்கும் (ஜெஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல் பி 98 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.08(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் செயற்திட்ட புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் பிரகாரம், முன்னைய நிதி மற்றும் திட்மிடல் அமைச்சாகவிருந்து தற்போதைய நிதி மற்றும் ஊடக துறை அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவரக உள்ளது. கிழக்கு மாகாணத்தில் நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்குதன் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதுடன் அதன் மூலம் அப்பகுதியில் வசிக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஜப்பான் ஜென் 6,054 மில்லியனிற்கு சமமான ரூபா 7,703 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஜப்பான் ஜென் 4,904 மில்லியனிற்கு சமமான ரூபா 6,239 மில்லியன் ஜப்பான சர்வதேச ஒஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 யூலையில் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2018 சனவரி 23 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் 2018 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் 10 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 656.60 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரிஇலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான திரண்ட நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஜ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஜேஐசீஏ | 4,904 | 6,239 | - | - | 5,315 |
| இலங்கை அரசாங்கம் | 1,150 | 1,464 | 32.20 | 32.20 | 619 |
| **மொத்தம்** | **6,054** | **7,703** | **32.20** | **32.20** | **5,934** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம், கிழக்கு மாகாணத்தில் கொண்டவத்துவன, பொத்துவில், உஹன, தமண, ஹிங்குரான, இறக்கமுனை, சம்மாந்துறை, தெகியத்தகண்டிய மற்றும் மஹாஓயா என்பவற்றின் 09 நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் உரிய நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) கொண்டவத்துவன நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கொண்டவத்துவன முதல் கல்முனை வரையான 28 கிலோமீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகளில், 25 கிலோமீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், மஹாஓயா நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 80 கிலோமீற்றர் விநியோக குழாய்கள் குழாயிடல் வேலைகளில், 48 கிலோமீற்றர் விநியோக குழாய்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது பாதுகாப்பான மற்றும் சுத்திகரித்த குடி தண்ணீர வழங்குவதற்கு தெகியத்தகண்டிய நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பிற்கு ரூபா 185.62 மில்லியன் தொகை முதலீடு செய்திருந்த போதிலும், அப்பகுதியில் வசிக்கின்ற மக்கள் புளோரைட் மற்றும் பொஸ்பரைட் உயர் அளவில் கொண்டிருந்த பகுதிகளில் நிலத்தடி நீரான குடிதண்ணீர் பெறுவதற் பல கஸ்ரங்களிற்கு முகம்கொடுத்தனர். பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது நீர் வழங்கல் திட்டங்களின் செயற்திட்ட அமுலாக்கல் பட்டியலின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 78 கிலோமீற்றர் விநியோக வழிகள் மற்றும் 68 கிலோமீற்றர் நிர் விநியோக வழிகள் என்பவற்றின் குழாயிடல் வெலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. தெகியத்தகண்டிய சுத்திகரிப்பு பெறிக்கான தண்ணீர் பரிமாற்றத்திற்கு ரூபா 12.13 மில்லியன் கிரயத்தில் எல்லகொட்டிய இறைக்கும் இல்லத்தில் பொருத்தப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் முறைப்படி செயற்பட்டிருக்காததுடன் அவற்றில் திட்டத்திற்காக வேண்டப்பட்ட தொழிலாளர் படையணி அமுலாக்கல் முகவரால் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என 2018 திசெம்பர் 03 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

### 3.4. குறைவாகப்பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 253.83 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பணாம நீர் வழங்கல் திட்டம் தெரிவுசெய்யப்பட்ட நீர் வழங்கலில் இருந்து தொடர்ச்சியான நீர் வழங்கலின் பற்றாக்குறைவு காரணமாக 2016 செப்தெம்பரிலிருந்து பயனற்று இருந்தது.

**3.5. நிதிக்கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் முகாமைத்துவ செவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின பிரகாரம், மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவரிடமிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 5,311.09 மில்லியன் தொகையான பெறுகைகள் ரூபா 1,099.77 மில்லியன் கடனாகவும் ரூபா 3,078.2 மில்லியன் மானியங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய தரப்பினருடன் 2017 திசெம்பர் 31 வரையும் துணைநிலை உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 626 இன் பிரகாரம், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைய பேணப்பட்ட தனித்தனியான கணக்கீட்டுப் பதிவேடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு செயற்திட்டத்தினது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டன. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட ஒரேமாதிரியான செயற்திட்டங்களின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பவற்றினை பதிவதற்கு ஒரு காசுப் புத்தகமே பேணப்பட்டிருந்தது.

(ஈ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.